## ஒன்றான ஸ்ரீபெரும்பூதூர் எதிராஜ ஜீயர்
## வாழி திருநாமம்

செய்ய தாமரைத் தாளிணை வாழியே
 சிறந்த செந்துவராடையும் வாழியே
துய்ய மார்பினில் மணிவடம் வாழியே
 துலங்கு தோளுறு முந்நூலும் வாழியே
கையிலேந்திய முக்கோலும் வாழியே
 கருணை ஆர் திருக்கண் மலர் வாழியே
பொய் இலாத எதிராச மாமுனி
 புவியில் ஓங்கிய புகழ் வளம் வாழியே

செஞ்சொல் மாத்தமிழ் மறையின் சிறப்புரைப்போன் வாழியே
 செய்ய துலாப் பூசத்தில் சிறந்துதித்தோன் வாழியே
தஞ்சம் எனப் பூதூரன் தாள் பணிவோன் வாழியே
 தராதலத்தோர் குறை ஒழிக்கும் தண்ணளியோன் வாழியே
கஞ்சமலர்க் கண்ணனையே கருத்தமைப்போன் வாழியே
 கடிபொழில் நற்பூதூரன் கழல் பணிவோன் வாழியே
அஞ்சல் என அடைந்தோரை ஆதரிப்போன் வாழியே
 ஆசில் எதிராச முனி அடி இணைகள் வாழியே

---